**கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு**

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

(NAQDA)

# பதவி வெற்றிடம்

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு (NAQDA) பின்வரும் காலியிடங்களை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பதவி 01 : கணக்காய்வு அலுவலகர்

**கல்வித் தகுதி மற்றும் அனுபவம் :**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

1. பல்கலைக்கழக மானியகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் / நிதி / வணிக முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் / வணிகம் தொடர்பான அல்லது அல்லது பதவிக்கு தொடர்புடைய பாடப்பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்

அல்லது

2. பதவிக்கு பொருத்தமான பாடப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தின் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் :**

1. மேலே வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு கோரப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. பதவிக்கு பொருத்தமான பாடப் பகுதியில் முகாமை உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத பதவியில் (MA 1-1) II தர நிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

3. பதவிக்கு பொருத்தமான பாடப் பகுதியில் முகாமை உதவியாளர் - தொழில்நுட்ப பதவியில் (MA 2-1) II தர நிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.

**பணியின் (சுருக்கம்)**

உள்ளக கணக்காய்வு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு தொடர்பான கணக்கியல் தரநிலைகள், கணக்காய்வு தரநிலைகள் மற்றும் உள்ளக காணக்காய்வில் தொடர்புடைய செயல்பாடுகளை திறம்பட மற்றும் செயல்திறனுடன் நிறைவேற்றுதல். முகாமை மற்றும் தணிக்கை மற்றும் முகாமைக் குழுவின் ஒப்புதலுக்காக வருடாந்திர உள்ளக கணக்காள்வுத் திட்டத்தைத் தயாரிப்பதில் உள்ளக கணக்காள்வாளருக்கு உதவுதல். தர முன்னேற்ற அறிக்கை மற்றும் கணக்காய்வு தொடர்பான பிற அறிக்கைகளைத் தயாரித்தல், கொள்முதல் செயல்முறை, கணக்கியல் செயல்முறை, கட்டண செயல்முறை, உற்பத்தி செயல்முறை போன்றவற்றைப் பற்றிய விசாரணைகளை மேற்கொள்வது மற்றும் சரிபார்த்தல். தலைமை அலுவலகம் மற்றும் நிலையங்கள், விரிவாக்க அலுவலகம், வெளிகள அலுவலகம் போன்றவற்றின் கணக்குகள் மற்றும் செயல்பாடுகளைத் கணக்காய்வு செய்தல்.

**சம்பள அளவுதிட்டம் :** JM 1-1 2016 : [42,600 - 10 x 755 - 18 x 1,135 - 70,580]

## பதவி 02 : விசாரணை அதிகாரி

**கல்வித் தகுதி மற்றும் அனுபவம் :**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

1. பல்கலைக்கழக மானியகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / வணிக முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வணிகம் தொடர்பான அல்லது பதவிக்கு தொடர்புடைய பாடப்பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் :**

1. மேலே வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு கோரப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. பதவிக்கு பொருத்தமான பாடப் பகுதியில் முகாமை உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத பதவியில் (MA 1-1) II தர நிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.

**பணியின் (சுருக்கம்)**

முழுநேர விசாரணை செயல்முறைகளை உருவாக்குதல் மற்றும் நிர்வகித்தல் ஆரம்ப விசாரணைகளை நடத்துதல் (தலைமை அலுவலகம், மீன்வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் மாவட்ட மீன்வளர்ப்பு விரிவாக்க அலுவலகம்) மற்றும் உள்நாட்டு விசாரணையை ஒருங்கிணைத்தல். தொழிலாளர் தீர்ப்பாய வழக்குகள், நீதிமன்ற வழக்குகளில் பங்கேற்பது மற்றும் காவல் துறையுடன் தொடர்புடைய வழக்குகளை ஒருங்கிணைத்தல்.

**சம்பள அளவுதிட்டம் :** JM -1 - 1- 2016 - [42,600 - 10 x 755 - 18 x 1135 - 70,580]

## பதவி 03 : கொள்முதல் அதிகாரி

**கல்வித் தகுதி மற்றும் அனுபவம் :**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

1. பல்கலைக்கழக மானியகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம் / பொருளியல் / முகாமைத்துவம் தொடர்பான பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் :**

1. பதவிக்கு பொருத்தமான பாடப் பகுதியில் முகாமை உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத பதவியில் (MA 1-1) II தர நிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.

**பணியின் (சுருக்கம்)**

பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல், விலைமனு மற்றும் விலைமனுக்கோரல் மற்றும் மனு ஆவணங்களைத் தயாரித்தல், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வழங்குனர்களைத் தொடர்புகொள்வது, தொழில்நுட்ப மதிப்பீடுகளுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல், டெண்டர் சபை கூட்டங்களை நடத்துதல், அலுவலக கடிதங்களைத் தயாரித்தல் போன்றவை.

**சம்பள அளவுதிட்டம் :** JM -1 - 1- 2016 - [42,600 - 10 x 755 - 18 x 1135 - 70,580]

## பதவி 04 : தொழில்நுட்ப அதிகாரி

**கல்வித் தகுதி மற்றும் அனுபவம் :**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்படும், NVQ நிலை 5 க்கு குறையாத தேசிய சிவில் தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது சான்றிதழ் படிப்பு.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் :**

1. வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு கோரப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**பணியின் (சுருக்கம்)**

சிவில் பணிகள் தொடர்பான தொழில்நுட்ப தரவு மற்றும் தகவல்களை அளவிடுதல் மற்றும் சேகரித்தல், திட்ட வடிவமைப்புகளைத் தயாரித்தல், அளவு பட்டியல் மற்றும் மதிப்பீடுகள், ஒப்பந்த நிர்வாகம், அசையும் மற்றும் அசையா உள்கட்டமைப்பு வசதிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு மேற்பார்வை, மீன்வளர்ப்பு நடைமுறைகளின் செயல்பாடு மற்றும் மேலாண்மை தொடர்பான சிவில் பணிகள் உட்பட.

**சம்பள அளவுதிட்டம் :** MA 2 - 1- 2016 - [30,310 - 10 x 300 - 7 x 350 - 4 x 495 - 20 x 660 - 50,940]

## பொது நிபந்தனைகள்

01. 22 வயதுக்கு குறையாதவாரும் 45 வயதுக்கு மேற்படாதவாரும் இருத்தல் வேண்டும். உயர் வயது எல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பொருந்தாது.
02. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
03. பதவியின் கடமைகளை நன்கு நிறைவேற்றவும், நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றவும் கூடிய உடல் மற்றும் மனரீதியான திடகாத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
04. நேர்மையான ஒழுக்காற்றுத் தன்மையை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
05. அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புதிய சம்பள சுற்றறிக்கையின்படி சம்பளம் மாற்றியமைக்கப்படும்.
06. அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபை / நிறுவனத்தில் நிரந்தர பதவியிலிருக்கும் ஊழியர்கள் தங்கள் விண்ணப்பங்களை பணிபுரியும் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.
07. முழு விவரங்களுடனான விண்ணப்பத்தை (சான்றிதழ்களின் நகல்களுடன்) **"தலைவர், இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையில்"** சமர்ப்பிப்பதுடன் மேலும், குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட்டு **2025.04.04** ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.** பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்,**

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE